செய்தி வெளியீட்டு எண் :35 | நாள் : 13.04.2022

**மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர், திரு. ஆர்.என். ரவி அவர்களின், தமிழ் புத்தாண்டு மற்றும் மகாவீரர் ஜெயந்தியின் வாழ்த்துரைகள்**

தமிழ்ப் புத்தாண்டு மற்றும் மகாவீரர் ஜெயந்தி கொண்டாடப்படும் இந்த இனிய, மகிழ்ச்சியான நந்நாளில், தமிழ்நாட்டின் அனைத்து சகோதர சகோதரிகளுக்கும் எனது மனமார்ந்த வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

நம் வாழ்வில் வளம், அமைதி மற்றும் மகிழ்ச்சியின் தொடக்கத்தைக் குறிக்கும் தமிழ் புத்தாண்டு தினம் ஒவ்வொரு ஆண்டும் தமிழ் ஆண்டின் 'சித்திரை' மாதத்தின் முதல் நாளில் கொண்டாடப்படுகிறது. நமது பண்பாடு, மரபுகள் மற்றும் செழுமையான பாரம்பரிய அடையாளங்கள் ஆகியவற்றின் பெருமைகளைப் பறைசாற்றும் இந்த விழா, நமது இலக்குகளை நோக்கிய ஒரு புதிய தொடக்கத்தைக் குறிப்பதுடன் ஒரு சிறந்த நாட்டினை உருவாக்குவதற்கான நமது உள்ளார்ந்த ஆர்வத்தினை நினைவூட்டுகிறது.

பகவான் மஹாவீரரின் அகிம்சை, அனைத்து உயிரினங்களிடமும் பரிவுடன் இருத்தல் போன்ற கொள்கைகள் மானுடவியலின் கண்ணியம், சமத்துவம் மற்றும் அனைத்து உயிரினங்களிடமும் அன்பு செலுத்துதல் ஆகியவற்றின் மாண்புகளை நமக்குக் கற்பிக்கிறது. உலகமே ஒரு குடும்பம் என்பதைக் குறிக்கும் "வசுதைவ குடும்பகம்" என்பது நமது நாட்டின் கருப்பொருளாக உள்ளது.

இந்த மகிழ்வான தருணம், நமது விழுமியங்களின் மீதான நம்முடைய ஈடுபாட்டை மீண்டும் உறுதிப்படுத்துவதற்கும், மனிதகுலத்திற்கிடையே நல்லிணக்கத்தைப் பரப்புவதற்கும் வாய்ப்பளிக்கிறது. இவ்விழாவானது, நமது மாநிலம் மற்றும் நாட்டின் முன்னேற்றத்திற்கு நம்முடைய சிறப்பான பங்களிப்புடன் நம் வாழ்வில் மகிழ்ச்சி, உடல்நலன், அமைதி மற்றும் வெற்றியை வழங்கட்டும்.

---

ஆளுநர் மாளிகை, சென்னை -22 | ஒம்/-
நாள்: 13.04.2022 | கூடுதல் இயக்குநர் (ம.தொ.)

Press Release No.35 Date : 13.04.2022

**HON'BLE GOVERNOR OF TAMIL NADU, THIRU.R.N.RAVI'S TAMIL NEW YEAR AND MAHAVEER JAYANTHI MESSAGES ON 14.04.2022**

On the auspicious and happy occasions of Tamil New Year and Mahaveer Jayanthi, I express my heartiest greetings and best wishes to all my brothers and sisters of Tamil Nadu.

Tamil New Year's Day is celebrated on the first day of 'Chitthirai' month of Tamil calendar every year and it indicates the onset of prosperity, peace and happiness in our lives. The festival with greatness of our culture, tradition and rich heritage marks a new start towards our missions and reminds our commitments to build a great Nation.

Bhagwan Mahaveer's philosophy of non-violence and compassion to all beings teach us the value of human dignity, equality and love to all creatures. It is at the core of our Nation's philosophy of Vasudhaiva Kutumbakkam, the world is a family.

These auspicious occasions give us an opportunity to re-affirm our commitment to our values and spread harmony among mankind. May these festivals fulfil our lives with joy, health, peace and success to enable us to contribute our best for the progress of State and the Nation.

.....................................................................................................................

Raj Bhavan, Chennai-22 Sd/-

Date : 13.04.2022 Addl. Director (PR)